**இலங்கை மகாவலி அதிகாரசபை 2010**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ள கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை மகாவலி அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் முவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றினை என்னால் தெரிவிக்க முடியாதுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

நியமம் 18 இன் பிரகாரம் சொத்துக்கள் விற்பனையின் இலாபம் நட்டம் கணிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட அதிகாரசபையின் துணைக் கம்பனி ஒன்றாகிய மஹாவலி பொறியியல் சேவை தனியார் கம்பனியினால் 2007 ஆம் ஆண்டின் பின்னர் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாதிருந்ததுடன் கடைசியாகத் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அக்கம்பனியின் சொத்துக்கள் ரூபா 9.6 மில்லியனாக இருந்தது. இதற்கு மேலதிகமாக இணைந்த கம்பனியாகிய மஹாவலி கால்நடைகள் தொழில் முயற்சிக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 73,992,312,363 தொகையான ஏனைய நிதிசார் சொத்துக்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வேலை பூர்த்திசெய்யப்பட்ட நிர்மாணங்கள் இனங்காணப்பட்டு நிலையான சொத்துக்களுக்கு மாற்றுதல் அல்லது வரிசை நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மஹாவலி விளையாட்டுச் செலவுகளான மீண்டுவரும் தன்மையான செலவுகளும் ஏனைய நிதிசார் சொத்துக்களாக கணக்குவைக்கப்பட்டிருந்தன.

(iii) அதிகாரசபையின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டு வேலை பூர்த்தியடைந்துள்ள 04 செயற்திட்டங்களின் ரூபா 46,380,139,021 தொகையான நிர்வாகச் செலவுகளை உள்ளடக்கிய ஒட்டுமொத்தச் செலவுகளும் இந்த மீதியில் உள்ளடங்கியிருந்தது.

(இ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமப்படுத்தப்படாதிருந்த உள்ளக வலய நடைமுறைக் கணக்குகளின் வரவு மீதி ரூபா 1,430,000 தொகையாகவும் செலவு மீதி ரூபா 4,804,000 தொகையாகவும் காணப்பட்டதுடன் அந்த மீதிகள் பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகளின் கீழ் செம்மையாக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 16,921,200 தொகையான விழா முற்பணங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அறவீடுகள் சுழற்சி நிதியக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ‘‘பொதுத் திறைசேரியிடமிருந்து மேலதிக நிதி ஏற்பாடுகளை விழா முற்பணங்கள் தொடர்பாக பெற்றுக்கொள்ளாமையினால் இவ்வாறு முற்பணங்களின் அறவீடுகளை சுழற்சி நிதியக் கணக்கில் வைப்புச் செய்வதற்கு காரணமாக இருந்தது. இதற்கிணங்க ஒவ்வொரு ஆண்டிலும் விழா முற்பணங்களைச் செலுத்தும் போது இந்த சுழற்சிக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்ட பணம் பயன்படுத்தப்படுவதாக பணிப்பாளர் நாயகம் எனக்கு தெரியப்படுத்தியிருந்தார்.’’

(உ) மகாவலி நிலையத்தின் வருடாந்த வருமானம் ரூபா 78,993 தொகையினாலும் மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் ரூபா 10,000 தொகையினாலும் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 1.2.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் சொத்துக்கள் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதிகளுக்கிடையே ரூபா 288,489 தொகையான வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) திரண்ட நிதியத்தில் 2010 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 98,404,890,000 ஆக இருந்த போதிலும் கணக்குகளில் அது ரூபா 98,391,489,000 ஆகக் காட்டப்பட்டதனால் ரூபா 13,401,000 தொகையான வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வியாபார மற்றும் ஏனைய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,135,989,000 ஆக இருந்தது. இதில் ரூபா 75,387,000 தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதியாக இருந்ததுடன் ரூபா 33,404,000 தொகையான மீதிகள் 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரியவையாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான குத்தகை வாடகை வருமானம் ரூபா 315,460,000 தொகையாக இருந்ததுடன் அதில் ரூபா 67,068,856 தொகையானது 28 பெரிய அளவான தொழில்முயற்சி நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறவனங்களுக்கு உரியவை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தப்பட்ட வேலை ஆயத்தப்படுத்தலுக்கான முற்பணங்களின் பெறுமதி ரூபா 295,324,000 ஆக இருந்ததுடன் அதில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தினை விஞ்சிய முற்பணங்களின் பெறுமதி ரூபா 20,954,000 ஆக இருந்தது. அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 18,293,228 தொகையான மீதிகளுக்குரிய 2 செயற்திட்டங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் முடிவடைந்திருந்தமையினால் உரிய சட்ட நடவடிக்கைகளை

எடுப்பதற்கும் முடியாதுள்ளது என்பது கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் ''கணக்குகள் மீதான கொடுப்பனவுகள்'' (On Account Payment) கணக்கின் மீதி ரூபா 44,194,000 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 12,896,000 தொகையான மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேல் பழைமைவாய்ந்தவையாகும். இது தொடர்பாக எதுவித விபரமான பட்டோலையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2008 ஆம் ஆண்டிலிருந்து அவ்வப்போது வனசீவராசிகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 42,417,000 தொகையான முற்பணம் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 48,217,000 கூட்டுமொத்தமான நானாவித கடன்பட்டோர் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர்களில் ரூபா 14,591,000 தொகையான மீதிகள் ஒரு ஆண்டிற்கு மேல் பழைமை வாய்ந்த மீதியாகும். அதில் ரூபா 6,299,585 தொகை 2011 நவம்பர் மாதமளவில் அறவிடப்பட்டிருந்தது.

(vi) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத சில்லறைக் காசு முற்பணங்களின் பெறுமதி ரூபா 1,266,000 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 407,000 தொகையான முற்பணங்கள் 05 ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த மீதிகளாகும்.

(ஆ) 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 13,240,000 தொகையான நிறுத்திவைத்தல் பணத்தினையும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 8,940,000 தொகையான கடன்கொடுத்தோரையும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

பின்வரும் விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) தம்புள்ளை இயந்திர வேலைத்தளத்தினை அமைத்தல் | கணிக்கப்படவில்லை. | அமைப்பதற்குரிய பணிப்பாளர் சபைத் தீர்மானம் |
| (ஆ) அழைப்பு வைப்பு | 93,969,000 | பணிப்பாளர் சபைத் தீர்மானம் |
| (இ) வைப்பு | 4,637,000 | விபரமான பட்டோலையும் மீதிகளின் உறுதிப்படுத்தல்களும். |

## 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை மஹாவலி அதிகாரசபையின் நிதிசார் நடைமுறைகள் | |
| - பிரிவு 1.5.1 | பிராந்திய கொள்வனவிற்கான முற்பணங்கள் அவை பெற்றுக்கொள்ளப்பட்டு 7 நாட்களுக்குள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 6 மாதங்களிலிருந்து 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குள் தீர்த்துவைக்கப்படாதிருந்த முற்பணங்களின் பெறுமதி ரூபா 1,345,000 ஆகும்.<br><br>2011 நவம்பர் மாதம் வரை இப்பணத்தில் ரூபா 555,000 தொகை அறவிடப்பட்டிருந்ததாக பணிப்பாளர் நாயகம் எனக்கு அறிவித்துள்ளார். |
| - பிரிவு 1.5.2 | முற்பணங்களைப் பெற்றுக்கொண்டு 2 மாதங்களுக்குள் முற்பணத்தொகை முழுவதும் தீர்த்துவைக்கப்படவேண்டிய போதிலும் ரூபா |

| | |
|---|---|
| | 265,000 தொகையான நானாவித முற்பணங்கள் தீர்த்து வைக்கப்படாது 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகத் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 13.4 ஆம் பிரிவு | விழா முற்பணங்கள் 10 மாதகாலத்திற்குள் அறவிடப்படவேண்டிய போதிலும் அவ்வாறு அறவிடப்படாது ஒரு ஆண்டினை மிகைத்த விழா முற்பணங்களின் பெறுமதி ரூபா 83,000 ஆக இருந்தது. |
| (இ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம், 1997 யூன் 27 ஆந் திகதிய 122 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் மற்றும் 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ/05 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபம் | பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்படுகின்ற படிகளில் அனைத்து படிகளும் உள்ளடக்கப்படுவதனால் ஊக்குவிப்பு படிகள், மிகையூதியங்கள் அல்லது ஏனைய வகையான நலன்களோ அல்லது அவ்வாறான படிகள் எதுவுமோ செலுத்தப்படக்கூடாது என்ற போதிலும் அதிகாரசபையின் தற்போதைய பணிப்பாளர் நாயகத்திற்கும் முன்னாள் பணிப்பாளர் நாயகத்திற்கும் ஆலோசனை சேவைச் செயற்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்வது தொடர்பாக ரூபா 109,695 தொகை ஊக்குவிப்புப் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) 2001 சனவரி 03 ஆந் திகதிய ஏரீசீயூ/02/160 ஆம் இலக்க மஹவலி பணிப்பாளர் நாயகத்தின் உள்ளக சுற்றுநிருபம் | (i) மஹாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்துக்களை பிரதேச சபைகளுக்கும்/ உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் ஒப்படைப்பது தொடர்பான ஆலோசனைகளுக்கு முரணாக தெஹியத்தகண்டிய வலயத்திலுள்ள வெளி நிறுவனங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் 06 உத்தியோகபூர்வ வதிவிடங்கள் வழங்கப்பட்டிருந்தன.<br>(ii) வரிசை நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ |

வதிவிடங்கள் அந்த நிறுவனங்களினால் உரிய முறையில் நிர்வகிக்கப்படாத சந்தர்ப்பங்களில் அந்த வதிவிடங்களின் உரிமையினை மீண்டும் அதிகாரசபைக்கு கொண்டுவர முடியும் என்ற போதிலும் தெஹியத்தகண்டியிலுள்ள 02 நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள 06 உத்தியோகபூர்வ வதிவிடங்கள் அந்நிறுவனங்களின் கவனயீனத்தின் காரணமாக கைவிடப்பட்டு பழுதடைந்த நிலையில் காணப்பட்டும் அந்த வதிவிடங்களை மீண்டும் அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத் திணைக்கள சுற்றுநிருபம்

- பிரிவு 02

மொறகஹகந்த களுகங்கை செயற்திட்டம்

---

செயற்திட்டத்தில் பதவியணியினரைச் சேர்த்துக்கொள்வதற்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- பிரிவுகள் 5.2 மற்றும் 5.3

(i) செயற்திட்ட பணிப்பாளரினால் தனக்குத் தகமையுள்ள மாதாந்த எரிபொருள் படியாகிய 145 லீற்றர்களுக்கு மிகையாக எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக எரிபொருளுக்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்ட பணிப்பாளரினால் மாதாந்தம் 75 லீற்றர்களிலிருந்து 400 லீற்றர்கள்

வரையான எரிபொருட்கள் என்ற வகையில் 33 உத்தியோகத்தர்கள் தொடர்பாக மாதாந்தம் 6145 லீற்றர் எரிபொருட்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 2.1 நிதி மீளாய்வு

---

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் அரசாங்கத்தின் பங்களிப்பினையும் முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்களையும் கவனத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னர் ரூபா 2,205,353,000 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,080,307,000 ஆக இருந்தது. ரூபா 1,730,000,000 தொகையான அரசாங்கத்தின் பங்களிப்பினைக் கவனத்திற்கு எடுத்துக்கொண்டதன் பின்னரும் முன்னைய ஆண்டுகளுக்கான செம்மையாக்கல்களுக்கு முன்னரும் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 475,353,000 ஆக இருந்ததுடன் ரூபா 1,642,500,000 தொகையான அரசாங்கத்தின் பங்களிப்பு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான செம்மையாக்கல்களுக்கு முன்னரும் முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 437,807,000 ஆக இருந்தது. இதற்கிணங்க அரசாங்கத்தின் பங்களிப்பினைக் கவனத்திற்கு எடுத்துக்கொண்டதன் பின்னரும் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 37,546,000 வீழ்ச்சியினைச் சுட்டிக்காட்டியது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

---

#### 2.2.1 செயலாற்றல்

---

மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயற்திட்ட முகாமைத்துவம்**

-----------------------------------------------

பின்வரும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) மொறகஹகந்த களுகங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் யானைகளின் தொந்தரவுகளுக்காக மின்சார வேலிகளைப் பொருத்துதல் மற்றும் தொலைதொடர்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.

மஹாவலி சீ வலயம்

-----------------------------------

(ii) காபோனிக் பசளை பயன்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உமிகளை எரிக்கும் பரல்களை வழங்குதல்.

(iii) கடற்றொழில் அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பாக அதிகாரசபையின் 50% பங்களிப்பின் அடிப்படையில் மீன்பிடி வலைகள் வழங்குதல்.

(iv) விவசாயக் கிணறுகளை நிர்ாமாணித்தல்

(v) தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளின் கீழ் மகளிர் குழுக்களுக்காக காளான் பயிர்ச் செய்கை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும் வெளிக்கள ஆய்வுகளும் (சந்தைப்படுத்தல்)

பின்வரும் செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(i) தொழில்நுட்ப சேவை நடவடிக்கையின் கீழ் கட்டிடங்களை திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தங்களை வழங்குதல்.

(ii) விசேட பசுக்கள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பசுக்களைக் கொள்வனவு செய்தல்.

பின்வரும் செயற்திட்டங்களின் செயலாற்றல் பலவீனமான நிலையில் (50% இனை விடக் குறைந்த செயல்முன்னேற்றத்துடன்) காணப்பட்டன.

மஹாவலி சீ வலயம்

-----------------------------------

(i) ‘‘அபி வவமு ரட நகமு’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 30000 வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக நாற்றுக்களைப் பகிர்ந்தளித்தல், விதைகளைப் பகிர்ந்தளித்தல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் என்பன.

(ii) ஒரு கிராமத்திற்கு ஒரு பயிர் என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மிளகாய், பெரிய வெங்காயம், சோயா சோளம், கடலை கொண்டைக் கடலை ஆகிய விதைகளைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டம்.

(iii) தொழில்நுட்ப சேவையின் கீழ் முகாம் பராமரிப்பு நடவடிக்கை.

**(ஆ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமும் செயல்முன்னேற்ற அறிக்கையும்**

-----------------------------------

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயல்முன்னேற்ற அறிக்கையினைப் பரிசோதனை செய்தபோது போதியளவு செயலாற்றலினை வெளிக்காட்டாதிருந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

(i) ரூபா 86.47 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்ட 41 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 42.47 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்ட 5 நிகழ்ச்சித்திட்டத்திங்களின் செயல்முன்னேற்றம் 10% இனை விடக்குறைவாக இருந்தது.

(iii) ரூபா 89.44 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்ட 13 நிகழ்ச்சித்திட்டங்களின் செயல்முன்னேற்றம் 10% இற்கும் 30% இற்கும் இடைப்பட்டதாகக் காணப்பட்டது.

(iv) ரூபா 26.85 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்ட 21 நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவித பௌதீக செயல்முன்னேற்றத்தினையும் செயல்முன்னேற்ற அறிக்கைகளில் காட்டியிருக்கவில்லை.

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

2010 ஆம் ஆண்டில் தம்புள்ளை இயந்திர வேலைத்தளத்தில் இடம்பெற்ற வாகன பழுதுபார்த்தல் தொடர்பாக அறவிடப்படவேண்டிய ரூபா 856,210 தொகை 2011 நவம்பர் 14 ஆந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல்களுக்காக விலைப்பட்டியல்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

| | விபரம் | சொத்துக்களின் எண்ணிக்கை | பெறுமதி | அவதானிப்பு |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) | வாகனம் | 08 | கணிப்பிடப்பட முடியாதுள்ளது | விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன. |
| (ii) | கிராந்துருக்கோட்டை நிலையத்திற்குச் சொந்தமான தொழில்பயிற்சி நிலையத்தின் கட்டிடங்களும் உபகரணங்களும் | கணிப்பிடப்பட வில்லை | கணிப்பிடப்பட வில்லை | பண்டாரவளை இலங்கை தொழில்பயிற்சி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | தெஹியத்தகண்டிய முகாமில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ வதிவிடம் | 01 | 609,745 | தனியார் தரப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. |

**(ஆ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| | சொத்துக்களின் வகை | சொத்துக்களின் எண்ணிக்கை | பெறுமதி | அவதானிப்பு |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) | தெஹியத்தகண்டிய உத்தியோகபூர்வ வதிவிடங்கள் | 20 | 14,773,000 | நீண்டகாலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டன. |
| (ii) | டயரும் டியூப்பும் பற்றைகள் வெட்டும் இயந்திரமும் அதன் தகடும், நாற்றுக்களை நடும் இயந்திரம் | 74 | 360,643 | தெஹியத்த கண்டிய களஞ்சியசாலையில் நீண்டகாலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது காணப்பட்டன. |
| (iii) | எழுதுகருவி இருப்பு | நிர்ணயிக்கப்பட முடியாதுள்ளது | தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை | தெஹியத்த கண்டிய களஞ்சிய சாலையில் 2 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டன. |
| (iv) | ஆய்வுகூடப் பொருட்கள் | நிர்ணயிக்கப்பட முடியாதுள்ளது | தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை. | தெஹியத்த கண்டிய களஞ்சிய சாலையில் நீண்டகாலமாக விளைவற்றுக் காணப்பட்டன. |

### 2.2.4 மனிதவள முகாமைத்துவம்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) ஆளணி முகாமைத்துவம்**

(i) 1999 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்டப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 4768 ஆக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 4466 ஆக இருந்தது. நிறுவனத்தில் ஊழியர் வெற்றிடம் 302 ஆகக் காணப்பட்டும் ஒரு சில பதவிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட ஊழியர்களின்

எண்ணிக்கையினை விட மிகையாக ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் வேலையாட்கள் பதவிகளுக்காக மாத்திரம் 389 ஊழியர்கள் மிகையாகக் காணப்பட்டனர்.

(ii) ஒப்பந்த மற்றும் பதிலாள் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 174 ஊழியர்களின் பதவி, ஒப்பந்த காலம் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

(iii) அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத பதவிகள் காணப்பட்டிருந்தும் சில பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மிகையாக ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தும் அவ்வாறான பதவிகளில் பதல்கடமைக்காக பதில் கடமை உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(iv) பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் சீ வலயத்தில் 22 ஊழியர்கள் 8 மாத காலம் நெல் சந்தைப்படுத்தும் சபையில் இணைத்துக்கொள்ளப்பட்டு அதிகாரசபையினால் அக்காலப்பகுதிக்கு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(v) அதிகாரசபையின் நிரந்தர பதவியணிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 22 பொறியியலாளர்கள், ஒரு முகாமைத்துவ உதவியாளர், 07 சாரதிகள் ஆகியோர் அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்களைத் திட்டமிடல் செயற்திட்டத்திற்கு பகுதி நேரத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தும் அவர்கள் செயற்திட்டத்தின் சேவையில் முழு நேரத்திற்குமாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(vi) மீளாய்வாண்டில் கிராந்துருக்கோட்டை அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெறுகின்ற கற்கைநெறிகள் குறைவடைந்துள்ளதன் காரணமாக அக்கற்கைநெறிகளுடன் தொடர்புபட்ட பதவியணியிர் விளைதிறனாக சேவையில் ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) முறையான அங்கீகாரமின்றி நியமித்தல்களும் படிகள் கொடுப்பனவுகளும்**

---

(i) அதிகாரசபையின் அங்கீகரித்த பதவியணியினுள் ஊடக ஆலோசகர் பதவி ஒன்று இல்லாதிருந்தும் 2008 யூலை மாதத்திலிருந்து 06 மாத கால எல்லைக்காக ரூபா 75,000 மாதாந்த படிக்கு ஊடக ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். 2010 யூலை மாதம் வரை அவ்வப்போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் அவரின் சேவைக்காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் இந்த ஆட்சேர்ப்பிற்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2008 யூலை மாதத்திலிருந்து 2010 யூலை மாதம் வரையான காலம் தொடர்பாக படிகள் எரிபொருள் செலவுகள், தொலைபேசிக் கட்டணம் என்பனவற்றிற்காக ரூபா 1,787,824 தொகை அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) தம்புள்ளை இயந்திர வேலைத்தளத்திற்காக நிபுணத்துவ இயந்திர பொறியியலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான பதவியினை உருவாக்குவதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட விசேட அங்கீகாரம் ஒன்று கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அப்பொறியியலாளரின் நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டவாறு நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் இன்னும் பெயர் குறிப்பிடப்பட்ட பல செயற்திட்டங்களில் நிபுணத்துவ இயந்திர பொறியியலாளராகச் செயற்பட வேண்டுமெனவும் அதற்காக அச்செயற்திட்டத்தின் மூலம் சம்பளம் செலுத்தப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயிலும் இந்த உத்தியோகத்தருக்கு மாதாந்தம் ரூபா 75,000 சம்பளம் அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தும் உரிய செயற்திட்டத்தின் மூலம் அப்பணத்தினை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட நிராவிய பண்ணையின் உதவிப் பணியாளர்களில் 07 பேர் மஹாவலி கால்நடைகள்

மற்றும் விவசாய தொழில்முயற்சிகள் (தனியார்) கம்பனியின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களாக இருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களின் எஞ்சிய சேவை நிபந்தனைகள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் அவர்களின் சம்பளம் அதிகாரசபையினால் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் சம்பந்தமாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் அவ்வப்போது அதிகாரசபையின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) இருப்பு மற்றும் களஞ்சிய கட்டுப்பாடு
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) வலய அலுவலகங்களில் செயல்முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்
(ஈ) உத்தியோகபூர்வ வதிவிடங்களின் நிர்வாகம்
(உ) நிலுவையான வரிகளை அறவிடல்
(ஊ) நிராவிய பண்ணை மற்றும் தம்புள்ள இயந்திர பண்ணையின் முகாமைத்துவம்